# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I
8069891
C

1. District : ஈரோடு மாவட்டம் | PS: ஊ.த.த.பிரிவு காவல்நிலையம் ஈரோடு | Year: 2020 ஆண்டு | FIR No.: 05/AC/2020 மு.த.அ. எண் | Date: 10.11.2020 நாள்

2. (i) Act சட்டம்: The P.C. Act 1988 as — Sections பிரிவுகள்: 7
(ii) Act சட்டம்: amended by The P.C. — Sections பிரிவுகள்: —
(iii) Act சட்டம்: (Amendment) Act 2018 — Sections பிரிவுகள்: —
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்
Date from : நாள் முதல் 1.11.2020 13.00 மணி
Date to : நாள் வரை 6.11.2020 14.00 மணி, 9.11.2020 12.00 மணி
Time Period : நேர அளவு
Time from : நேரம் முதல்
Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 10.11.2020
Time : நேரம் 08.00 மணி
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் VOL-IV
Time : நேரம் 10.11.2020 / 9.00 மணி

4. Type of Information : Written/ Oral :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக எழுத்துமூலமாக (கணினியில் தட்டச்சு செய்யப்பட்டது)

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: சுமார் 35 கி.மீ மேற்கு
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
Beat Number : —
முறைக் காவல் எண்
(b) Address : கிராம நிர்வாக அலுவலர் அலுவலகம்,
முகவரி திங்களூர் கிராமம், கோபிசெட்டிபாளையம் தாலுக்கா, ஈரோடு மாவட்டம்.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — District : —
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : A. முத்துசாமி
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர்
(b) Father's/ Husband's Name : அர்த்தனாரிகவுண்டர்
தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth வயது
நாள் / பிறந்த ஆண்டு 62/2020
(d) Nationality : நாட்டினம் இந்தியன்
(e) Passport No. : —
வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் —
Place of Issue : வழங்கப்பட்ட இடம் —
(f) Occupation : தொழில் விவசாயம்
(g) Address : முகவரி 15, பாரதியார் வீதி, எலந்தக்காடு, திங்களூர், கோபிசெட்டிபாளையம் வட்டம், ஈரோடு மாவட்டம்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
திரு. கந்தசாமி, கிராம நிர்வாக அலுவலர், திங்களூர் கிராமம், கோபிசெட்டிபாளையம் தாலுக்கா, ஈரோடு மாவட்டம்

8. Reasons for delay in reporting by the complainant / Informant: தாமதமில்லை
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்) —

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

சமர்ப்பிக்கப்படுகிறது :-

விவரம் தனித்தாளில் கணினியில் தட்டச்சு செய்து இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed .................... Rank .................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS ............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .......................... பதவி .................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[illegible] 10.11.2020 [signature] 2020

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 10.11.2020 09.45 hrs
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் M.P. திவ்யா
Rank: நிலை [illegible] No. எண் ..........
[illegible]

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p 2

**<u>Attachment to Column 12 of FIR in Erode V&AC Cr.No 5/AC/2020 u/s 7 of PC Act, 1988 as amended by the PC (Amendment) Act, 2018.</u>**

<u>பணிந்து சமர்பிக்கப்படுகிறது:</u>

ஈரோடு ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் துணை கண்காணிப்பாளர் M.P.திவ்யா ஆகிய நான் 10.11.2020ம் தேதி 08.00 மணிக்கு நிலைய அலுவலகில் இருந்தபோது A.முத்துசாமி, த/பெ (லேட்) அர்த்தனாரிகவுண்டர், 15, பாரதியார் வீதி, எலந்தக்காடு, சிறுவலூர், கோபிசெட்டிபாளையம் தாலுக்கா, ஈரோடு மாவட்டம் என்பவர் நிலையம் ஆஜராகி எழுத்துமூலமான ஒரு புகாரினை கொடுத்தார். அந்த புகாரின் விபரம் பின்வருமாறு:-

அனுப்புநர், A.முத்துசாமி, த/பெ.(லேட்).அர்த்தனாரிகவுண்டர், 15, பாரதியார் வீதி, எலந்தக்காடு, சிறுவலூர், கோபிச்செட்டிபாளையம் வட்டம், ஈரோடு மாவட்டம். பெறுநர், லஞ்ச ஒழிப்புத்துறை அதிகாரி அவர்கள், லஞ்ச ஒழிப்புத்துறை அலுவலகம், கருங்கல்பாளையம், ஈரோடு. அம்மா, நான் மேற்கண்ட முகவரியில் எனது குடும்பத்துடன் குடியிருக்கிறேன். நான் ஒன்பதாம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு இரண்டு மகன்கள் மற்றும் ஒரு மகள் உள்ளனர். அவர்கள் அனைவருக்கும் திருமணமாகிவிட்டது. எனது தந்தை அர்த்தனாரிக்கவுண்டர் என்பவர் கடந்த 1998ம்வருடம் இறந்துவிட்டார். அவருக்கு சிறுவலூர் கிராமம், எலந்தக்காட்டில் சுமார் 12 ஏக்கர் விவசாய நிலம் உள்ளது. எனக்கு ஒரு அண்ணன் மற்றும் ஐந்து சகோதரிகள் உடன் பிறந்தவர்கள் ஆவார்கள். எனது அண்ணன் திருமூர்த்தியும், மூத்த அக்கா விஜயலட்சுமியும் இறந்துவிட்டார்கள். எங்கள் அப்பா பெயரில் உள்ள சொத்துக்களை பாகப்பிரிவினை செய்துகொள்ள நாங்கள் தீர்மாணித்தோம். அதற்கு எங்கள் அப்பாவின் வாரிசு சான்றிதழ் தேவைப்பட்டது. அதனால் கடந்த வருடம் வாரிசு சான்று வேண்டி இ-சேவை மையத்தின் மூலம் விண்ணப்பித்திருந்தேன். அதன்பேரில் சிறுவலூர் வி.ஏ.ஓ மற்றும் ஆர்.ஐ ஆகியோர் என்னையும், என் உடன்பிறந்தவர்களையும் மற்றும் வாரிசுதாரர்களையும் விசாரித்து வாக்குமூலம் பெற்றார்கள். அதன்பின்னர் கடந்த அக்டோபர் மாதம் முதல் வாரத்தில் ஒருநாள் கோபி தாலுக்கா அலுவலகம் சென்று எங்கள் அப்பாவின் வாரிசு சான்றிதழ் சம்மந்தமாக விசாரித்தபோது அங்கிருந்த ஒரு அதிகாரி என்னிடம் இருந்த ஒப்புகை சீட்டை வாங்கிபார்த்துவிட்டு, உங்கள் விண்ணப்பம் தள்ளுபடி ஆகிவிட்டது என்று சொன்னார். பின்னர் நான் சிறுவலூர் வி.ஏ.ஓ ஆபீசுக்கு சென்று வி.ஏ.ஓவிடம் எனது மனு தள்ளுபடி ஆனதை பற்றி கேட்டபோது, அவர் சரி புதிதாக இ-சேவை மையத்தில் ஒரு விண்ணப்பம் பதிவு செய்துவிட்டு வாருங்கள், பார்த்துக்கொள்ளலாம் என்று சொன்னார். அதனால் நான் கடந்த 29.10.2020ம்

தேதி கோபியில் தாலுக்கா ஆபீஸ் அருகில் உள்ள இ-சேவை மையத்திற்கு சென்று வாரிசு சான்று கேட்டு மீண்டும் விண்ணப்பம் பதிவு செய்து ஒப்புகை சீட்டு பெற்றேன். அதன்பின்னர் 04.11.2020, புதன்கிழமை அன்று மதியம் சுமார் 1 மணிக்கு சிறுவலூர் வி.ஏ.ஓ ஆபீசுக்கு சென்று வி.ஏ.ஓ அவர்களை பார்த்தேன். அவர்பெயர் கந்தசாமி என்று தெரிந்துகொண்டேன். அப்போது அவர் என்னிடம் வாரிசு சான்று விண்ணப்பம் செய்துவிட்டீர்களா என்று கேட்டார். நான் விண்ணப்பம் செய்துவிட்டதாக சொல்லி என்னிடமிருந்த ஒப்புகை சீட்டை எடுத்து கொடுத்தேன். அவர் அதை வாங்கி பார்த்துவிட்டு இந்த முறை கண்டிப்பாக வாரிசு சான்று வாங்கி விடலாம் என்று சொல்லி அதற்கு செலவாகும் என்றும், பத்தாயிரம் ரூபாய் கொடுத்துவிடுங்கள், நான் எல்லா வேலைகளையும் முடித்து வாரிசு சான்று வாங்கிவந்து கொடுத்துவிடுகிறேன் என்றும் சொன்னார். அதன் பின்னர் நான் திரும்பி வந்துவிட்டேன். மீண்டும் 06.11.2020ம் தேதி வெள்ளிக்கிழமை அன்று மதியம் சுமார் 2 மணிக்கு சிறுவலூர் வி.ஏ.ஓ அவர்களை அவரது ஆபீசில் பார்த்து எங்கள் அப்பாவின் வாரிசு சான்று பற்றி கேட்டேன். அதற்கு அவர் ஏற்கனவே சொல்லியிருந்தபடி பணம் பத்தாயிரம் ரூபாய் கொண்டுவந்திருக்கீங்களா என்று கேட்டார். அதற்கு நான் தற்போது அவ்வளவு பணம் என்னிடம் இல்லை என்றும் குறைத்துக்கொள்ளுங்கள் என்றும் கேட்டேன். அதற்கு அவர் பணம் குறைத்துக்கொள்ள முடியாது என்றும் முதலில் ஐந்தாயிரம் ரூபாய் கொடுங்கள், விண்ணப்பத்தை அனுப்பி விடுகிறேன் என்றும் வாரிசு சான்று கைக்கு வந்தவுடன் மீதி தொகை ஐந்தாயிரம் ரூபாயை கொடுத்துவிடுங்கள், இதற்கு மேல் என்னால் ஒன்றும் செய்ய முடியாது என்று கண்டிப்பாக சொல்லிவிட்டார். எனக்கு வேறு வழியில்லாததால் அதற்கு ஒப்புக்கொண்டு வந்துவிட்டேன். பின்னர் 09.11.2020ம் தேதி திங்கள் கிழமை மதியம் சுமார் 12 மணியளவில் சிறுவலூர் வி.ஏ.ஓ அவர்களை அவரது ஆபீசுக்கு சென்று பார்த்தேன். அப்போது அவர் என்ன பணம் ரெடியாகிவிட்டதா என்று கேட்டார். நான் இன்னும் ரெடியாகவில்லை என்றும், எனது விண்ணப்பத்தை முதலில் அனுப்புங்கள் என்று கேட்டேன். அதற்கு அவர் தான் கேட்டபணத்தை கொடுத்தால்தான் விண்ணப்பத்தை அனுப்பமுடியும் என்றும் நாளை 10.11.2020 மதியத்துக்குள் பணத்தை ஏற்பாடு செய்துகொண்டு வந்து அலுவலகத்தில் கொடுக்கவேண்டும் என்றும் அப்போது தான் விண்ணப்பத்தை அனுப்புவேன் என்றும் இல்லையென்றால் இந்த விண்ணப்பத்தையும் தள்ளுபடி செய்துவிடுவேன் என்றும் சொல்லிவிட்டார். எனவே நான் அவர் சொன்னபடி பணத்தை ஏற்பாடு செய்துகொண்டு வருவதாக சொல்லிவிட்டு வந்துவிட்டேன். பிறகு யோசித்து பார்த்ததில் எனக்கு வாரிசு சான்று பெற சிறுவலூர் வி.ஏ.ஓ கந்தசாமி அவர்களுக்கு லஞ்சமாக பணம் கொடுக்க விருப்பமில்லை. நான் வி.ஏ.ஓ திரு.கந்தசாமி லஞ்சமாக கேட்ட முன்பணம் ரூ.5000/-ஐ கொண்டுவந்துள்ளேன். எனவே சிறுவலூர் வி.ஏ.ஓ கந்தசாமி மீது தக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். மேலும் தேவையானால்

பயன்படுத்திக்கொள்ள வாரிசு சான்று விண்ணப்பத்திற்கான ஒப்புகை சீட்டு எண் TN-7202010291665 இத்துடன் இணைத்து சமர்ப்பிக்கிறேன். இப்படிக்கு, கையொப்பம் ( XXX )

இணைப்பு: ஒப்புகை சீட்டு எண் TN-7202010291665.

Sir, Received the above said computer typed complaint on 10.11.2020 at 08.00 hrs, a confidential verification was conducted about the complaint through sources. The complaint was found to be genuine and reputation of the accused was found to be bad. Hence, after getting oral permission from the DVAC, I am registering a case in Erode Vigilance and Anti-Corruption Cr.No.5/AC/2020 u/s 7 of PC Act, 1988 as amended by the PC (Amendment) Act, 2018 at 09.00 hrs today on 10.11.2020. Sd/- (xxxxxxxx) 10.11.2020 M.P.Dhivya, Deputy Superintendent of Police, V&AC, Erode.

Original FIR along with the original complaint of Tr.A.Muthusamy, S/o.(late) Arthanarigoundar, 15, Bharathiyar street, Elanthakadu, Siruvalur, Gobichettipalayam Taluk, Erode District is submitted to the Hon'ble Chief Judicial Magistrate and Special Judge, Erode and a copy of FIR will be submitted to the Director, Vigilance and Anti Corruption, Chennai.

10/11/2020

(M.P.Dhivya)
Deputy Superintendent of Police,
Vigilance and Anti-Corruption,
Erode.